අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/9/18/5/1(II)

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2021.01.

**TRANSLATION COPY**

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,

**'சிஷ்யோதா' விசேட மற்றும் உள்ளடங்கல் கல்விக்கான தேசிய நிறுவகத்தின் ஆசிரியர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்**

விசேட தேவைகள் உடனான சிரார்களினது கல்வி அபிவிருத்திக்காக ஹோமாகம கல்வி வலயத்தில் கஹதுடுவ, வெனிவல்கொலவில் அமைந்துள்ள 'சிஷ்யோதா' விசேட மற்றும் உள்ளடங்கல் கல்விக்கான தேசிய நிறுவகத்தின் ஆசிரியர் பதவிகளுக்காக இலங்கை ஆசிரியர் சேவை தரம் 3-I மற்றும் 3-II ஐச் சேர்ந்த ஆசிரியர்களை நியமிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இதன்போது விசேட கல்வி ஆசிரியர்கள் நால்வரும் (04), உடற்கல்வி, ஆலோசனை, சித்திரம், நடனம், சங்கீதம், தகவல் மற்றும் கணணித் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களிற்கு ஒவ்வொரு ஆசிரியர் வீதமும் தேர்ந்தெடுப்பதற்கு மாகாண/தேசிய பாடசாலைகளில் ஏற்கனவே சேவையில் இருக்கும் பின்வரும் தகைமைகளை உடைய ஆசிரியர்களிடமிருந்து (சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூல) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விசேட கல்வி ஆசிரியர்கள் - 04**

தேர்ந்தெடுப்பதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

a) 'சிஷ்யோதா' விசேட மற்றும் உள்ளடங்கல் கல்விக்கான தேசிய நிறுவகமானது விசேட மற்றும் உள்ளடங்கல் கல்விக்கான ஓர் தேசிய நிறுவகம் என்பதன் காரணமாக, மாணவர்களை மதிப்பீடு செய்தல், ஆசிரியர்களுக்கான ஆலோசனைக் கோவைகளை தயாரித்தல், கற்றல் கற்பித்தல் முறைகள் மற்றும் மதிப்பீட்டு முறைகளை விருத்தி செய்தல், விசேட கல்வி ஆசிரியர்களை பயிற்றுவித்தல் போன்ற துறைகள் தொடர்பில் பயிற்சி மற்றும் அனுபவம் காணப்படல்.

b) 02 வருடங்களுக்கு குறையாது விசேட கல்வித் தேவையுடனான மாணவர்களுக்கான கற்பித்தல் அனுபவம் பெற்றிருக்கும் நபராக இருத்தல்.

c) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இரண்டு மொழிகளிலேனும் பணிபுரியும் ஆற்றல் காணப்படல்.

**உடற்கல்வி, ஆலோசனை, சித்திரம், நடனம், சங்கீதம், தகவல் மற்றும் கணணித் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களிற்கான ஆசிரியர்கள் - 06**

தேர்ந்தெடுப்பதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

a) தாம் விண்ணப்பிக்கும் பாடத்திற்கு அரச பாடசாலை ஒன்றில் குறைந்தது 2 வருடங்களுக்கு குறையாது கற்பித்தல் அனுபவம் காணப்படல்.

b) விசேட கல்வித் தேவையுடனான மாணவர்களுக்குரிய கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடல், உள்ளடங்கலிற்கு உட்படுத்தப்பட்ட மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடல், அம் மாணவர்களினது தனித்துவமான திறமைகளை விருத்திசெய்வதற்குரிய வழிமுறைகளை முன்னெடுத்தல், பயிற்சியளித்தல், போட்டித் தீர்ப்பு சாதனைகள் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டிருத்தலும் அவற்றில் வெற்றியீட்டியிருத்தலும் விசேட தகைமையாகக் கருதப்படும்.

c) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இரண்டு மொழிகளிலேனும் பணிபுரியும் ஆற்றல் காணப்படல்.

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk

அதன் பிரகாரம் குறித்த பதவிகளுக்காக தங்களது மாகாணத்தில் சேவையாற்றும் இலங்கை ஆசிரியர் சேவை தரம் 3-I மற்றும் 3-II ஐச் சேர்ந்த ஆசிரியர்களினது விண்ணப்பப் படிவங்களை (இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட) தங்களது பரிந்துரையுடன் ‘கல்விப் பணிப்பாளர், முறைசாரா மற்றும் விசேட கல்விக் கிளை, கல்வி அமைச்சு, ‘இசுருபாய’, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு **2021.02.23** ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் அறியத்தருகின்றேன். விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பாடம் குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்பதாரி மாகாண பாடசாலை ஒன்றில் சேவையாற்றுபவர் ஆயின் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரின் பரிந்துரையுடனும், தேசிய பாடசாலை ஒன்றில் சேவையாற்றுபவர் எனில் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரின் பரிந்துரையுடனும் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

**கவனத்திற்கு :** தெரிவு செய்யப்படும் சகல ஆசிரியர்களும் நிறுவகத்தின் நோக்கத்தினை நிறைவேற்றும் பொருட்டு நடாத்தப்படும் வதிவிட, வதிவிட மற்ற மற்றும் விசேட வேலைத்திட்டங்களில் சேவையின் தேவை காரணமாக சேவையாற்றுவதற்கு இணங்க வேண்டும்.

**கே.ஏ.டீ.புண்ணியதாஸ** **ஒப்பம்.**
கல்விப் பணிப்பாளர்
(முறைசாரா மற்றும் விசேட கல்வி)

**பேராசிரியர் கே.கபில சீ.கே.பெரேரா**
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதி :

01. சகல விசேட கல்விக்குப் பொறுப்பான மாகாண/வலய பி.க.ப./உ.க.ப. – தய. நடவடிக்கைக்காக